**செய்தி வெளியீடு எண்: 083** **நாள்: 29.01.2020**

# செய்தி வெளியீடு

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், சாந்தோம், சென்னை–4 மூலம் சென்னை–5, மாநிலக் கல்லூரியில் நடைபெற்ற தொழில்நெறி வழிகாட்டுதல் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை, இயக்குநர் திரு,வே,விஷ்ணு, இ.ஆ.ப., அவர்களால் குத்துவிளக்கு ஏற்றி வைத்து துவக்கி வைக்கப்பட்டது. நிகழ்ச்சியின் தொடக்கமாக கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை இயக்குநர் அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன. பின்பு இயக்குநர் அவர்கள் மாணவர்களிடையே சிறப்புரையாற்றினார். நுழைவுத் தேர்வு, இராணுவப்பணி, வங்கிப்பணி, மென்திறன்களை வளர்த்தல், இரயில்வே துறையில் பணிகள், தொழில்முனைவோர் மேம்பாடு ஆகிய துறைகளில் சிறந்த வல்லுநர்கள் அவரவர் துறைகள் பற்றி மாணவர்களுக்கு விளக்கம் அளித்தனர். இயக்குநர் அவர்கள் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்காக காட்சிப்படுத்தப்பட்ட புத்துகங்கள் மற்றும் வரைபடங்களை பார்வையிட்டார், இந்நிகழ்ச்சியில் 500–க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இந்நிகழ்ச்சியின் இறுதியாக மாணவர்களிடம் நிகழ்ச்சி குறித்த நிறைகள் மற்றும் குறைகளை படிவத்தில் பூர்த்தி செய்து பெற்றுக்கொள்ளப்பட்டது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**